<u>**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**</u>
<u>**கொழும்பு**</u>

**ஊடக அறிக்கை**
**********************

## இலங்கையின் அபிவிருத்திப் பங்காளர் ஒருங்கிணைப்பு மன்ற அமர்வில் பங்கேற்ற பிரதி உயர் ஸ்தானிகர்

2023 ஏப்ரல் 04ஆம் திகதி கொழும்பு திறைசேரி வளாகத்தில் நிதி இராஜாங்க அமைச்சர் கௌரவ ஷெகான் சேமசிங்க அவர்கள் தலைமையில் இடம்பெற்றிருந்த இலங்கையின் அபிவிருத்திப் பங்காளர் ஒருங்கிணைப்பு மன்ற அமர்வில் பிரதி உயர் ஸ்தானிகர் திரு வினோத் கேக்கப் அவர்கள் பங்கேற்றார். திறைசேரியின் இம்முயற்சியினை இங்கு பாராட்டியிருந்த திரு வினோத் கேக்கப் அவர்கள் இவ்வாறான அமர்வுகளை ஆறு மாதத்திற்கு ஒரு தடவை ஒழுங்கமைக்கவேண்டுமென்ற முன்மொழிவுக்கு தனது ஆதரவினையும் தெரிவித்திருந்தார். பொருளாதார நெருக்கடி மற்றும் சர்வதேச நாணய நிதியம் குறித்த விவகாரங்களில் இலங்கை மக்களுக்காக இந்தியா உறுதியான ஆதரவினை வழங்கியதாக இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்திருந்த பிரதி உயர் ஸ்தானிகர் இலங்கை வெகு விரைவில் பொருளாதார மீட்சியினை எட்டும் என்றும் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

2. அதுமட்டுமல்லாமல், இந்தியா - இலங்கை இடையிலான முன்மாதிரியான அபிவிருத்தி ஒத்துழைப்பு பங்குடைமை குறித்து இங்கு விவரித்த பிரதி உயர் ஸ்தானிகர் ஜேக்கப் அவர்கள், தெற்கிலிருந்து தெற்கிற்கான ஒத்துழைப்பு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே இவ்விரு அயல் நாடுகள் இடையிலுமான இவ்வாறான ஈடுபாடுகள் அமைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டினர். இந்திய வீடமைப்புத் திட்டம் , 1990 சுவசெரிய அம்புலன்ஸ் சேவை, கண்டிய நடன அகடமி . இலங்கையின் பிரத்தியேக டிஜிட்டல் அடையாள அட்டை, மீன்பிடித் துறைமுகங்கள், மருத்துவமனைகள், பாடசாலைகள், போன்ற பல்வேறு அபிவிருத்தி திட்டங்களும் சமூக பொருளாதார துறைகளை சார்ந்தவை என்ற அடிப்படையிலும் இலங்கையின் முன்னுரிமை அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கடந்த எட்டு வருடங்களில் மொத்த அபிவிருத்தி ஒத்துழைப்பானது 600 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளதுடன் 20க்கும் அதிகமான திட்டங்கள் இதுவரையில் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

3. அதேவேளை இவ்விடயங்கள் தொடர்பாக எதிர்கொள்ளப்பட்டிருந்த சவால்கள் குறித்து தெளிவுபடுத்திய பிரதி உயர் ஸ்தானிகர் ஜேக்கப், கடந்த சில வருடங்களாக காணப்பட்டிருந்த இறக்குமதி தடைகள் மற்றும் மூலதன நெருக்கடிகள் சில திட்டங்களை அமுல்படுத்துவதில் தாக்கங்களை ஏற்படுத்தியிருந்ததாக குறிப்பிட்டார். அதுமட்டுமல்லாமல் சில சந்தர்ப்பங்களில் உள்ளூர் வளங்களில் ஏற்பட்டிருந்த பற்றாக்குறைகளும் இந்த முன்னேற்றங்களில் தாக்கங்களை ஏற்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். சூழலுக்கு இசைவான மூலப் பொருட்கள் மற்றும் உள்ளூரில் காணப்படும் வளங்களின் விநியோகம் ஆகியவற்றுக்காக இலங்கை பங்காளர்கள் மீது தங்கி இருப்பது இந்திய அபிவிருத்தி திட்டங்களின் மிகவும் தனித்துவமிக்க அம்சங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இலங்கை தரப்பினருடன் ஒன்றிணைந்து இவ்வாறான விடயங்களை நிவர்த்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கையினை இந்தியா கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*******************

**கொழும்பு**
**04 ஏப்ரல் 2023**